D.V .No. 3./2020 12.06.2026

**PW1**. ஹேமலதா க/பெ. சரவணமுத்து

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்குவிசாரணை**

2ம் எதிர்மனுதாரர் எனது அப்பாவுடன் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குடும்பத்திற்கும் மனுதாரர் குடும்பத்திற்கும் 3 தலைமுறையாக பெண், கொடுத்து, எடுக்கும் பழக்கும் இருந்து வருகிறது என்றால் 2 தலைமுறைகளாக உள்ளது. அந்த வகையில் எனது தகப்பானாரின் சொத்துக்களில் எதிர்மனுதாரர்தரப்பினர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதற்கு முன்னர் எதிர்மனுதாரர்தரப்பினர்கள் எங்கள் குடும்பத்திலிருந்து பங்கு கொடுத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது யாருடன் இருந்து வருகிறேன் என்றால் எனது அப்பா வீட்டிற்கு அருகே ஒரு வாடகை வீட்டில் இருந்து வருகிறேன். புகார் மனுவில் உள்ள முகவரியில் நான் குடியிருக்கும் வீட்டிற்கான முகவரி இல்லை என்றால் சரிதான், நான் மனுவிலும், நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரி எனது தந்தையின் வீட்டு முகவரி ஆகும். நான் மனுவில் சொல்லியுள்ள வீட்டு முகவரி யாருடைய சொத்து என்றால் எனது தந்தை வழி பூர்விக சொத்து ஆகும். அந்த வீட்டில் எனது மாமியாரான 2ம் எதிர்மனுதாருக்கும் பங்கு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்படி 1ம் எதிர்மனுதாருக்கும் அந்த சொத்தில் உரிமை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கூறியதை தவிர எனது தந்தைக்கு பூர்விக விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான்

2) எனது நிருபண வாக்குமூலத்தில் ரூ.2 லட்சம் பணம் வரதட்சணை

பணம் மற்றும் சீதன பொருட்கள் மற்றும் நகை, பணம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன், இது தொடர்பாக இதற்கு முன்னர் மணப்பாறை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு எண் CC No.18/15 ன் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் நிருபண வாக்குமூலத்தில் 25.04.2014 ம் தேதி வரை நடந்ததாக சொல்லப்பட்டுள்ள சம்பவத்தை மேற்கூறிய குற்ற வழக்கு புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் CC No 18/15 வழக்கிற்கான புகார் மனுவில் 25.04.2014 வரை நடந்த சம்பவங்களை நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். **(அந்த புகார் மனு சான்றிட்ட நகல் எமாசஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அந்த புகார் மனுவில் 2014 வருடத்திற்கு முன்னர் எனது குழந்தைக்கு காதனி விழா நடந்ததாகவும், அப்போது நான் நகை போட்டதாகவும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3) எனது 2வது குழந்தையின் பிறந்ததேதி என்ன என்றால் 09.02.2011. பொதுவாக எத்தனை நாட்கள் கழித்து முடி எடுப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது குழந்தைக்கு காதணி விழாவின்போது நகைகள் செய்யவில்லை, அவ்வாறு செய்திருந்தால் எமசாஆ 1ல் அதுபற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் எனது குழந்தைகளுக்கு காதணி விழா நடந்ததாகவும் சொல்லப்படும் மணப்பாறையில் உள்ள நல்லாண்டவர் கோவிலான இந்து அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது குழந்தைகளுக்கு மொட்டை அடித்து காதணி விழாவைத்ததிற்கு ரசீது எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அந்த காதணி விழா நடத்தியதற்கான புகைப்படங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

4) 25.04.2014 ம் தேதி நடந்த குற்ற சம்பவத்திற்கான வழக்கில் எதிர்ம்னுதாரர் CC NO 18/15 வழக்கில் 05.03.2021 ம் தேதி மாண்புமிகு மணப்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். **(அந்த தீர்ப்பு சான்றிட்ட நகல் எமசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

5) எனது கணவர் அவரது காப்பீட்டு திட்டத்தில் என்னை நாமினியாக சேர்த்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குற்ற வழக்கு நடந்த பின்னர் எதிரிகள் எங்கள் வீட்டில் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. நானும், எனது தந்தையும் குற்ற வழக்கு சொல்லப்பட்டுள்ள சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எதிரியின் வீட்டிற்கு காவல் துறையினருடன் சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. அப்போது அங்கிருந்து எனக்கு சொந்தமான பொருட்கள் அனைத்தையும் நான் எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 06.10.2019 ம் தேதி எங்கள் வீட்டில் வந்து மிரட்டியதாகவும், அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலம் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் 8 ம் பத்தியில் 06.10.2019 ம் தேதி நடந்ததக சொல்லப்படும் சம்பவம் நான் சொல்லிதான் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் 06.10.2019 ம் தேதி எங்கு வேலை செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ரேடியன் கேஸ் மேனேஜ்மென்ட்டில் வேலை செய்தார். அந்த நிறுவனம் மணப்பாறையில்தான் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் மேற்கூறிய நிறுவனத்தில்தான் வேலை செய்கிறார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் 2014 ம் வருடம் அவர் சொல்லிதான் தெரியும். 06.10.2019 ம் தேதி நடந்த சம்பவத்தை வைத்துதான் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், இதற்கு முன்னர் எதிர்மனுதாரர் என்னை கொடுமை செய்ததன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன்.

6) நான் எதிர்மனுதாரர் சாட்சிகளை மிரட்டி மேற்கூறிய குற்ற வழக்கில் சாட்சியம் அளித்ததாக சொல்லியுள்ளேன், எப்போது, யாரை எதிர்மனுதாரர் மிரட்டினார் என்றால் சாட்சிகள் அனைவரும் எதிர்மனுதாரர் உறவினர்கள், அவர்களை மிரட்டிதான் மணப்பாறை நீதிமன்றத்தில் பிறழ்சாட்சியம் அளிக்க வைத்துள்ளார். அவர்கள் பிறழ்சாட்சியாக அளிக்கவில்லை என்றால் சரியல்லல. மேற்கூறிய குற்ற வழக்கில் எனது தரப்பில் எத்தனை சாட்சியம் அளிக்கப்பட்டது என்றால் 2014ம் வருடம் நடந்ததனால் ஞாபகம் இல்லை, அந்த வழக்கில் கடைசியாக சாட்சியம் அளித்தது யார் என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் 8 வது சாட்சியாக 19.09.2019ம் தேதி கிருஷ்ண வேணி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அன்றையதினமே முதல் விசாரணை, குறுக்குவிசாரணையும் முடிந்தது என்றால் சரிதான்.

அதன்பின்னர்தான் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய குற்ற வழக்கின் பொய் புகாரின்பேரில் எதிர்மனுதாரர்களை தண்டிக்க இயலவில்லை என்பதனால் மற்றும் ஒரு பொய்யான தகவலை சொல்லி 04.12.2019ம் தேதி இந்த வழக்கை தவறான முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) எனது முதல் குழந்தை பிறப்பதற்கு எனது தாயார் வீட்டில்தான் பிரசவம் பார்த்தாக சொல்லியுள்ளேன், அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பாவுடன் உடன்பிறந்த மற்றொரு சகோதரியான சுந்தரம் என்பவர் மதுரையில் குடியிருந்து செவிலியராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான்.

அந்த அத்தைதான் எனது இரு குழந்தைகளுக்கான பிரசவத்தை பார்த்தார் என்றால் சரியல்ல. அந்த மருத்துவ ரசீதை காண்பித்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் அந்த ஆவணத்தை நான் காண்பிக்கவில்லை. மேற்கூறிய குற்ற வழக்கில் சொல்லப்பட்ட சம்பவம் நடந்தபோது எனது மூத்த மகள் மணப்பாறையில் உள்ள பள்ளியில்தான் படித்து வந்தார் என்றால் சரிதான். அந்த குழந்தை எதிர்மனுதாரரின் பராமரிப்பில்தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல, நான் பணம் கொடுத்து தந்தை என்ற முறையில் அவர் செலுத்தி வந்தார். அந்த சமயத்தில் வேலைக்கு செல்லாமல் இல்லத்தரசியாக இருந்து வந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது தந்தையும் வேலையிலிருந்து ஒய்வு பெற்று வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரிதான். குற்ற வழக்கு சம்பவத்திற்கு பின்னர் யார் அந்த பள்ளியிலிருந்து யார் மாற்றினார் என்றால் நான்தான் மாற்றினேன். அதன்பின்னர் நான் தற்போது உள்ள கருங்காலக்குடியில் உள்ள பள்ளியில் சேர்த்தேன் என்றால் சரிதான். மேற்படி நடக்காத சம்பவத்தை புகார் கொடுத்து குற்ற வழக்கு ஆனதால்தான் அதனால்தான் எங்கள் குடும்ப வாழ்க்கையில் பிரச்சனை ஏற்பட்டு, குழந்தைகள் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் இருந்து என்னிடம் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்தின்போது என்ன வேலை செய்து வந்தார் என்றால் ஆட்டோ பைனான்ஸ் செய்து வந்தார். ஆட்டோ பைனான்ஸ் எவ்வளவு காலம் நடத்தி வந்தார் என்றால் தற்போது வரை நடத்தி வருகிறார். அவ்வாறு எதிர்மனுதாரர் ஆட்டோ பைனான்ஸ் நடத்தி வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனுவில் சொல்லியுள்ளேன், ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த நிறுவனம் அவர் நடத்தி வருகிறாரா அல்லது அதில் பங்குதாராக இருந்தாரா என்றால் முதலில் பங்குதாராக இருந்தார், தற்போது

அவர் நடத்தி வருகிறார். திருமணம் ஆகி பிரச்சனை ஏற்பட்டதால் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் நஷ்டம் ஏற்பட்டு முதலை இழந்து கஷ்டத்தில் உள்ளார், அதனால்தான் மனுவில் சொல்லவில்லை, ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) மணப்பாறையிலிருந்து எனது வீடான கருங்காலக்குடிக்கு எவ்வளவு தூரம் என்றால் 50 கிமீக்குள் இருக்கும். எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1 மணி நேரம் ஆகும். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணமானது எனது கணவர் வேலை செய்யும் நிறுவனத்தை சேர்ந்தது என்றால் சரிதான், இதற்கு பார்த்ததில்லை, தற்போதுதான் பார்க்கிறேன். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணத்தில் 06.10.2019 ம் தேதி உள்ளது என்றால் சரிதான். அது எதிர்மனுதாரர் பணம் செலுத்தியதாக காலை 10.20 என்று உள்ளது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று, நான் அவரிடம் செல்லாமல் சென்றதனால் 09.09.2023 ம் தேதி எதிர்மனுதாரர் மணப்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், அந்த சமயத்தில் வேலைக்கு சென்றுகொண்டிருந்தேனா என்றால் இல்லை. நான் அப்போது பள்ளியில் வேலை செய்துகொண்டிருந்தேன், அதனால்தான் எதிர்மனுதாரரிடம் சொல்லாமல் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எனது தந்தை வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். தற்சமயம் நான் ஏதேனும் வேலையில் உள்ளேனா என்றால் மருந்தகத்தில் வேலை செய்து வருகிறேன். Asset and Liability Statement ல் நான் வேலைக்கு செல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் 2 மாதத்திற்கு முன்னால் தான் வேலைக்கு சேர்ந்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் மக்கள் மருந்தகத்தில் வேலை செய்யும்போது எடுத்த புகைப்படம் என்றால் சரிதான். **(அந்த புகைப்படம்**

**எமசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அந்த புகைப்படத்தில் 3ம் மாதம் அங்கு வேலை செய்ததாக உள்ளது என்றால் சரிதான், 10 நாட்கள் பயிற்சிக்கு சென்றுவிட்டு தற்போது மீண்டும் வேலைக்கு சேர்ந்துள்ளேன். எனது கணவர் வேலை செய்யும் நிறுவனத்திலிருந்து அவர் அங்கு பெறும் வருமானத்திற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )